
# 8 சீனாய் உடன்படிக்கை



படம் 8.1 - மோசே பத்துக் கட்டளைகளுடன்

ஒருவிடயத்தை முன்னிட்டு, இருசாரார் நிபந்தனையோடு ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தமே உடன்படிக்கை ஆகும். இத்தகைய உடன்படிக்கைகள் பல உண்டு. அரசியல் உடன்படிக்கை, பொருளாதார உடன்படிக்கை, சமாதான உடன்படிக்கை திருமண உடன்படிக்கை என சில உதாரணங்களைக் கூறுலாம்.

திருவிவிலியத்திலும் பல உடன்படிக்கைகள் காணப்படுகின்றன. அந்த உடன்படிக்கைள், பொதுவாக சமுதாயத்தில் காணப்படும் உடன்படிக்கைகளை விட முற்றிலும் வேறுபட்டதாகும். அத்தகைய வேறுபாடுகள் சில பின்வருமாறு,

1. உடன்படிக்கைக்கு முன்வருபவர் இறைவன்.

2. இறைவனுக்கும் மனிதனுக்குமிடையில் எல்லையிற் இடைவெளி இருக்கிறது.

3. இறைவன் வாக்குறுதிகளுக்கு நம்பிக்கைக்குரியவராக இருந்த போதும் மனிதன் அந்த வாக்குறுதியை மீறுகிறான்.

அத்தகைய உடன்படிக்கைகளுக்கு சில உதாரணங்கள்

### 1. இறைவன் - ஆதிபெற்றோர்

> உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்' என்றார்.
>
> (தொ.நூ. 3:15)

ஆதிப் பெற்றோர் இறைவனுக்குக் கீழ்ப்படியாமல், அவரது கட்டளையை மீறி இறையுறவை இழந்தமையால் இறைவன் அவர்களுடன் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொண்டார். அந்த இழந்த இறை உறவை மீண்டும் கட்டியெழுப்ப மீட்பர் ஒருவரை அனுப்புவதாக இறைவன் ஆதிப்பெற்றோருக்கு வாக்களிக்கிறார். அவ் வாக்குறுதி கிறிஸ்துவில் நிறைவேறியது.

### 2. இறைவன் - நோவா

ஆதிப்பெற்றோரின் கீழ்ப்படியாமையினால் பாவத்திற்குட்பட்ட மனிதனின் பாவநிலை படிப்படியாக வளர்ந்தது. எனவே, இறைவன் பாவத்தையும், அதற் குட்பட்டவர்களையும் வெள்ளப்பெருக்கின் வழியாக இவ்வுலகிலிருந்து அழிக்க சித்தம் கொண்டார். மீண்டும் வெள்ளப்பெருக்கினால் உலகை அழிக்கப்போவதில்லை என இறைவன் உடன்படிக்கை ஒன்றின் மூலம் வாக்குப் பண்ணினார்.

> ''........உங்களோடு என் உடன்படிக்கையை நிறுவுகிறேன்; சதையுள்ள எந்த உயிரும் வெள்ளப்பெருக்கால் மீண்டும் அழிக்கப்படாது. மண்ணுலகை அழிக்க இனி வெள்ளப்பெருக்கு வரவே வராது.''
>
> (தொ.நூ. 9:11)



இவ் உடன்படிக்கையின் வெளியடையாளம் வானவில் ஆகும்.

என் வில்லை மேகத்தின் மேல் வைக்கிறேன். எனக்கும் மண்ணுலகுக்கும் இடையே உடன்படிக்கையின் அடையாளமாக இது இருக்கட்டும்.

(தொ.நூ. 9:13)

## 3. இறைவன் - ஆபிரகாம்

இறைவன் ஆபிரகாமோடும் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டார். அந்த உடன்படிக்கை இரு மரபுகளில் இருந்து எடுக்கப்பட்டு இரண்டு விதமாக முன்வைக்கப்பட்டுள்ளது.

| தொ.நூ. 15:1-21 (J மரபு) | தொ.நூ. 17:1-14 (Pமரபு) |
|---|---|
| 1. அப்பொழுது ஆண்டவர் ஆபிராமை வெளியே அழைத்து வந்து,'' வானத்தை நிமிர்ந்து பார். முடியுமானால் விண்மீன்களை எண்ணிப்பார். இவற்றைப் போலவே உன் வழிமரபினரும் இருப்பர்.'' (தொ.நூ. 15:5) | ''.....மிகப்பெருமளவில் உன்னைப் பலுகச் செய்வேன்; உன்னிடமிருந்து நாடுகளை உருவாக்குவேன், உன்னிடமிருந்து அரசர்கள் தோன்றுவர். (தொ.நூ. 17:6) |
| 2. ''....... எமோரியர், கானானியர், கிர்காசியர், எபூசியர் ஆகியோர் வாழும் இந் நாட்டை உன் வழிமரபினர்க்கு வழங்குவேன்.'' (தொ.நூ. 15:21) | ''......நீ தங்கியிருக்கும் நாட்டையும் கானான் நாடு முழுவதையும் என்றுமுள்ள உரிமைச் சொத்தாக உனக்கும் உனக்குப் பின் உன் வழி மரபினருக்கும் வழங்குவேன். நான் அவர்களுக்குக் கடவுளாக இருப்பேன்'' (தொ.நூ. 17:8) |

இவ் உடன்படிக்கையில் இரண்டு பிரதான விடயங்கள் அடங்குகின்றன.

1. பெரியதொரு சந்ததியைப் பெற்றுக்கொடுத்தல்
2. எக்காலத்திற்கும் உரிமையான ஓர் நாட்டைப் பெற்றுக்கொடுத்தல்.

இறைவன் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் வெளி அடையாளம் விருத்த சேதனமாகும்.

நீங்கள் கடைப்பிடிக்குமாறு உன்னோடும் உனக்குப்பின் வரும் உன் வழிமரபினரோடும் நான் செய்துகொள்ளும் உடன்படிக்கை இதுவே; உங்களுள் ஒவ்வொரு ஆணும் விருத்த சேதனம் செய்துகொள்ள வேண்டும்.

(தொ.நூ. 17:10)

இந்த வெளிச்சடங்கினை நிறைவேற்றுவதன் மூலம் இஸ்ரயேல் மக்கள் இறைவனோடு உடன்படிக்கை உறவொன்றுக்கு உட்படுத்தப்பட்டனர்.

4. **சீனாய் உடன்படிக்கை** இடையருக்குரிய வாழ்க்கை நடாத்திய இஸ்ரயேல் மக்கள் சீனாய் உடன்படிக்கை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இறைமக்களாக மாறினர். இந்த உடன்படிக்கைக்கு ஏற்ப வாழ்வதற்கு இறையன்பின் விசேட அடையாளமாக பத்து கட்டளை அவர்களுக்கு வழங்கப்பட்டது. நாம் இறைவனோடும், அயலவரோடும் தொடர்புகொள்ள வேண்டிய முறை இதன்மூலம் எமக்கு விளக்கப்படுகிறது. இந்த உடன்படிக்கையின் மூலம் எமக்கும் இறைவனுக்கும், அயலவருக்குமிடையில் நெருங்கிய உறவு ஏற்படுகிறது.

விடுதலைப்பயணம் 20:1-17

**இறைவன் மட்டில் நமது கடமைகள்**

1. நானே உன் கடவுளாகிய ஆண்டவர்;...... என்னைத்தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது.
2. 'உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே'
3. ஓய்வு நாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு.

**அயலவர் மீது நமது கடமைகள்**

4. உன் தந்தையையும் உன் தாயையும் மதித்து நட.
5. கொலை செய்யாதே.
6. விபசாரம் செய்யாதே.
7. களவு செய்யாதே.
8. பிறருக்கு எதிராகப் பொய்ச்சான்று சொல்லாதே.
9. பிறர் வீட்டைக் கவர்ந்திட விரும்பாதே.
10. பிறருக்குரியது எதையும் கவர்ந்திட விரும்பாதே.

இஸ்ரயேலின் எல்லாத் தலைமுறையினரும் அதைப் பின்பற்றி இறையுறவைக் கட்டி எழுப்பியுள்ளனர். நாமும் அதைப் பின்பற்றி ஒழுக்கவிழுமியங்களைக் கொண்ட வாழ்க்கையை வாழ்ந்து இறையாட்சிக்குள் நுழையும் தகுதியைப் பெற்றுக் கொள்வோம்.

சீனாய் உடன்படிக்கை வழியாக இஸ்ரயேலர் இறைமக்களானது போல, திருமுழுக்கின் மூலம் இறைவன் எம்மோடு செய்யும் உடன்படிக்கை வழியாக நாமும் இறைபிள்ளைகளாகின்றோம்.

திருமுழுக்கு வார்த்தைப்பாடு

இறைவனில் நம்பிக்கை வைப்போம்.

சாத்தானையும் அதன் செயல்களையும் விட்டுவடுவோம்

இந்த வாக்குறுதியை நிறைவேற்றி இறைவனின் பிள்ளைக்குரிய தன்மையைப் பாதுகாப்போம்.

நமது விண்ணகதந்தை வாக்குறுதிகளுக்குப் பிரமாணிக்கமாக இருப்பது போல அவருடைய பிள்ளைகளாகிய நாமும் அவருக்குக் கொடுக்கும் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். நாம் இறைவனுக்குக் கொடுத்த வாக்குறுதியை மட்டுமல்ல, அயலவருடன் செய்துகொள்ளும் வாக்குறுதிகளையும் நிறைவேற்றி பிரமாணிக்கம் உள்ளவர்களாக வாழவேண்டும். அதன்மூலம் நாமும் நமது விண்ணக தந்தையை மகிமைப்படுத்துவோம்.

**செயற்பாடு**

1. பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| தொடர் இலக்கம் | உடன்படிக்கை | உடன்படிக்கை செய்து கொள்ளக் காரணம் | உடன்படிக்கையின் வாக்குறுதி |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |

2. 'பத்துக்கட்டளைகள் எல்லாக் காலத்திற்கும் உரியது' இக்கூற்றை 75 சொற்கள் அளவில் விபரிக்குக.

3. நீர், உமது திருமுழுக்கு வார்த்தைப்பாட்டை எவ்வாறு பிரமாணிக்கமாக நிறைவேற்றுகிறீர் என்பதனை எடுத்துக்காட்ட ஐந்து உதாரணங்கள் தருக.

**வாழ்க்கைக்கு**

- ✝ திருமுழுக்கு வாக்குறுதியை வாழுவோம்.
- ✝ பத்துக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவோம்.
- ✝ ஒழுக்க விழுமியங்களுக்கேற்ப வாழுவோம்.
- ✝ வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்.